பக்கங்கள்:-22

காலை முரசு

## மீண்டும் ரணில் நாடாளுமன்றம் வருவாரா?



### ராஜித விளக்கம்

“முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கி மரசிங்கவுக்கு மீண்டும் 07

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 11 | ஞாயிற்றுக்கிழமை | 28.12.2025 | அதிர்வு 150




# பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை

## வவுனியாவில் தொல்பொருள் திணைக்களம் அடாவடி





(கி.வசந்தன்)

**வவுனியா, சமணங்குளம் கல்லு மலை பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் பணியில் தொல் பொருள் திணைக்களத்தினர் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் அந்தப் பகுதி தமிழ் மக்கள் கடும் விசனம் தெரிவித் துள்ளனர்.** 06

# உள்ளூராட்சி பாதீடு தோல்வியால் அரசுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை

## பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு

சில உள்ளூராட்சி சபைகளில் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுவதால் அரசுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், தோற்கடிக்கப்படுவது திசைகாட்டியின் வரவு – செலவுத் திட்டம் அல்ல என்றும், அது மக்களின் வரவு – செலவுத் திட்டம் என்றும், தோற்கடிக்கப்பட்ட கொழும்பு மாநகர சபை வரவு – செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டுக்கான ஏராளமான திட்ட முன்மொழிவுகள் சேர்க்கப்பட்டிருந்தன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி சபையில் இருந்து மக்களுக்குச் சேவைகளை 06






‘ஆகாயத்தில் போன சனியனை ஏணி வைத்து இறக்கி, மடியில் கட்டிக் கொண்டது போல’ என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் கூறப்படுவது உண்டு.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை – அதுவும் அவருக்கு கையளித்த தற்காப்பு ஆயுதம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் – கைது செய்து, விசாரணை நடத்த முற்பட்டிருப்பது அத்தகைய வேலைதான் என்று அரசுத் தலைமைக்கு பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து ஆலோசனை பறந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து’ குழப்ப வேண்டாம் என்று அரசுத் தலைமைக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கையளிக்கப்பட்டதாக கூறப்படும் ஆயுதங்கள் எப்போது வழங்கப்பட்டன என்ற விவரத்தை கணக்கில் எடுக்காமல் புலனாய்வாளர்கள் இந்த விடயத்தைப் பகிரங்கமாக விசாரிக்க முற்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுத் 06



# மக்களை அச்சுறுத்தி வந்த 18 அடி இராட்சத முதலை காத்தான்குடி வாவியில் இறந்து கரை ஒதுங்கியது!

மட்டக்களப்பு காத்தான்குடி வாவியில் நீண்ட நாள்களாக அச்சுறுத்தி வந்த இராட்சத முதலை நேற்றுக் காலை இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

இரண்டு மனிதர்கள், பல மாடுகள், ஆடுகள், நாய்கள், பூனை, கோழிகளை இழுத்துச் சென்ற இந்த இராட்சத முதலையைப் பிடிக்க மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களம், காத்தான்குடி நகர சபை வாவியோரத்தில் கூட்டைப் பொருத்தி முயற்சிசெய்த போதிலும் முடியாமல்போன நிலையில் நேற்றுக் காலையில் இறந்த நிலையில் அது கரையொதுங்கியுள்ளது.

சுமார் 18 அடி நீளமுள்ள இம்முதலையினால் வாவியொரத்தை அண்டி வாழும் மக்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதையில் வாகனங்களைச் செலுத்திய 358 சாரதிகள் ஒரே நாளில் சிக்கினார்கள்!

இலங்கையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 358 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு



நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 20 பேரும், சந்தேகத்தின் பேரில் 627 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 227 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 137 பேரும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 31 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4 ஆயிரத்து 571 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# அநுர அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்தவில்லை!

## ஊடகங்களை அடக்கவும் முற்படவில்லை என்று அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் அவசரகாலச் சட்டம் தவறான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்று அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

அத்துடன், ஊடகங்களை அடக்கி ஆளவும் முற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"பேரிடருக்குப் பின்னரே நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. மக்களுக்குச் சேவையாற்றுவதற்குத் தடையாக உள்ள காரணிகளை நிவர்த்தி செய்வதற்காகவே அந்தச் சட்டம் வந்தது. எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனைத் தவறாக எமது அரசு பயன்படுத்தவில்லை.

கடந்த ஆட்சிக் காலங்களில்தான்



ஊடகங்களுக்கு எதிராக அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டன. எம் மீது ஊடகங்கள் விமர்சனங்களை முன்வைத்தால்கூட அவை பற்றி நாம் கவலை அடையமாட்டோம். ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும்." – என்றார்.





# இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினத்தை ஒட்டி பசுமை இயக்கம் நடத்திய நிகழ்ச்சி நல்லூரில்!

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொதிகளும் வழங்கி வைப்பு**

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்ச்சி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வளவாளராக மென்பொருள் பொறியியலாளர் வி.திவாகரன் கலந்துகொண்டு இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தைத் தணிவிப்பதில் சூழல் பாதுகாப்பின் இன்றியமையாமை குறித்து உரையாற்றினார்.

நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன் “வாழ்வளித்த தாயே நீயே சாவும் அளித்தாய்“ என்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கடற்கோள் தொடர்பான கவிதையை வாசித்தார். தொடர்ந்து



கடற்கோள், புயல், வெள்ளம் போன்ற பல்வேறு இயற்கைப் பேரிடர்களினாலும் பலியானவர்களுக்கு மெழுகுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில் சமீபத்திய டித்வா புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 125 குடும்பங்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் “அற்றார் அழிபசி தீர்த்தல்“ திட்டத்தினூடாக உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான அனுசரணையை சுவிஸ் வாழ் ச. விஜயகுமார் வழங்கியிருந்தார். இந்நிகழ்ச்சியில் அவரும், அவருடைய குடும்பத்தினரும், சுவிஸ் நண்பர்களும், பசுமை இயக்கத்தின் துணைப் பொதுச்செயலாளர் சண். தயாளனும் கலந்துகொண்டு பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

இலங்கையை 2004, டிசெம்பர் 26ஆம் திகதி அதிகாலை கடற்கோள் தாக்கியதில் 35,000 பேர்வரை பலியாகியிருந்தார்கள். 5,000 பேர்வரையில் காணாமற்போயிருந்தார்கள். இந்நாளை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாகக் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



















# ஹிக்கடுவை கடலில் காப்பாற்றப்பட்ட உக்ரைன் பெண்ணும் அவரின் மகனும்

**(உடப்பு க.மகாதேவன்)**

ஹிக்கடுவை, பன்னம்கொட கடற்கரையில் நேற்று முன்தினம் நீராடிக்கொண்டிருந்த வெளிநாட்டுப் பெண் ஒருவரும் அவரது மகனும் கடல் அலையில் சிக்கி இழுத்துச் செல்லப்பட்டபோது, ஹிக்கடுவை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் அவர்களைப் பத்திரமாக மீட்டுள்ளனர்.

மதிய வேளையில் கடற்கரையில் கடமையில் ஈடுபட்டிருந்த உயிர் காப்பு அதிகாரிகளான சப் இன்ஸ்பெக்டர் சிறிமல், பொலிஸ் கான்ஸ்டபிள் (87162) திஸாநாயக்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் (96221) துமிந்த ஆகியோரே இவர்களைக் காப்பாற்றியுள்ளனர். 42 வயதுடைய உக்ரைன் நாட்டுப் பெண் மற்றும் அவரது 14 வயதுடைய மகனே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

# உள்ளூராட்சி மன்றங்களின் சபை அனுமதிக்கு பின்பே யாழிற்கான 10 ஆண்டு அபிவிருத்தியை ஆராயமுடியும்

## தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வலியுறுத்தல்

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு எனத் தயாரிக்கப்பட்ட பத்து ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டம் உள்ளூராட்சி மன்றங்களின் அவைத் தீர்மானத்தைப் பெறாதது. அவ்வாறான ஓர் ஆவணத்தை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அனுமதிக்க முடியாது. அதனை வர்த்தமானிப்படுத்த முடியாது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் எதிர்த்தமையினால் விரைவில் உள்ளூராட்சி மன்றங்களின் அவைத் தீர்மான அனுமதியுடன் அதனை அணுகுவது என முடிவு எட்டப்பட்டது.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் பத்து ஆண்டுக்கான திட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதிக்காக நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு அனுமதி கோரப்பட்டது.

இதன் போது வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் - உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அவைகள் அமைந்துள்ளன. எனவே இந்த 10 ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தை

ஏற்பதாயின் உள்ளூராட்சி மன்றங்களின் சபைத் தீர்மானங்கள் அவசியம். சபைத் தீர்மானங்கள் இன்றி அபி



விருத்தித் திட்டத்தை ஏற்பது உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களையும் காத்திரமான அபிவிருத்தி இலக்கினையும் மீறுவதாகும். சபையில் வரைவை நாம் ஆராய்ந்து காத்திரமான, பொருத்தமான முடிவுகளை எடுக்க வேண்டும். அதுவரையில் ஒத்திவைக்க வேண்டும். - என மாவட்ட அபிவிருத்திக் குழுவில் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகரபிதா சிவாஜிலிங்கமும் வரைவில் போதாமைகள் காணப்படுகின்றன என்றார்.

இவ் விடயம் விவாதத்திற்கு உள்ளாகிய போது நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், மேற்படி வரைவை இன்றே நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியமையுடன் நகர அபிவிருத்தி தொடர்பான விடயத்திற்கும் உள்ளூராட்சி மன்றத்திற்கும் என்ன தொடர்பு எனக் கேள்வியும் எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர் நிரோஷ் ஆட்சி முறைமை தொடர்பான அறிவில் தாங்கள் பூச்சியமாக உள்ளீர்கள். உள்ளூராட்சி மன்றங்களே அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் அதிகாரமுடையவை. உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியின்றி - ஒத்துழைப்பின்றி - அபிவிருத்தியை முன்கொண்டு செல்ல முடியாது என்றார்.

இந் நிலையில் மாவட்ட அபிவிருத்தி அனுமதியை வழங்குவோம், பின்னர் தங்களுடைய சந்தேகங்களை உள்ளூராட்சி மன்றங்கள் தீர்த்துக்கொள்ளட்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதனை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் தாம் ஒட்டுமொத்தமாக ஏற்க முடியாதெனத் தெரிவித்தார்.

இந் நிலையில் எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் உள்ளூராட்சி மன்றங்கள் ஆராய்ந்து உரிய அவைத் தீர்மானங்களை வழங்க முடியுமா என அரச அதிபர் ம. பிரதீபனினால் கோரப்பட்டது.

அதற்கு தவிசாளர்கள் சம்மதித்த நிலையில், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் அமைச்சர் சந்திரசேகரனினால் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியைப் பெற்று எதிர்வரும் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு விடயம் ஒத்திவைக்கப்பட்டது.





# பதுளை மாவட்டத்தில் தன்னார்வ சேவையில் நேற்றும் இன்றும் ஆயிரம் இளைஞர்,யுவதிகள்

**(நடராஜா மலர்வேந்தன்)**

"One Million Volunteers" திட்டத்தின் கீழ் பேரழிவால் பாதிக்கப்பட்ட பதுளையில் சேவை செய்ய ஆயிரம் இளைஞர்கள் இணைந்துள்ளனர்.

பேரழிவால் கடுமையாக பாதிக்கப்பட்ட பதுளை மாவட்டத்திற்கு தன்னார்வ சேவைகளை வழங்கும் நோக்குடன் மேற்படி திட்டத்தின் கீழ், ஆயிரம் இளைஞர்,யுவதிகள் கொண்ட குழு ஒன்று நேற்று இணைந்துள்ளது.

இந்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு ஊவா மாகாண ஆளுநர் கபில ஜயசேகர தலைமையில் பண்டாரவெல இளைஞர் படையின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கை முழுவதும் பல்வேறு மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர்கள் கூடி, நேற்றும் இன்றும் பதுளை மாவட்டத்தின் பேரழிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேவை செய்ய திட்டமிட்டுள்ளனர்.

இதன்போது தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, இளைஞர் அலுவல்கள் பிரதி அமைச்சர் தினிது சமன் ஹென்னாயக்க, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுபுன் விஜேரத்ன, பதுளை மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள், மேலும், நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த திட்டம் ஊக்குவிக்கும் இளைஞர் திறன், சமூக பணி மற்றும் மனிதாபிமான பணிகளில் இளைஞர்களின் பங்களிப்பை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான அத்தியாயமாக அமைந்துள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) தலைமைக்குக் காலம் தாழ்த்திதான் விளங்கி இருக்கின்றதாம்.

சம்பந்தப்பட்ட ஆயுதங்கள் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி டக்ளஸ் தரப்புக்குக் கையளிக்கப் பட்டிருக்கின்றன. வெறும் பிஸ்டல் மாத் திரம் கையளிக்கப்படவில்லை. ரி-56 ரக இயந்திரத்துப்பாக்கிகள் 17 மற்றும் சிறிய பிஸ்டல் ரக ஆயுதங்கள் ஆறு அன் றைய தினத்தில் வழங்கப்பட்டிருக்கின் றன.

அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத் திலும், கொழும்பிலும், நெடுந்தீவிலும் இயங்கிய ஈ.பி.டி.பிக்கு அவர்களின் பாதுகாப்புக்கு என பல கட்டங்களில் பல தடவைகளில் ஆயுதங்கள் பெரும் அளவில் வழங்கப்பட்டன.

சந்திரிகாவின் அந்த ஆட்சிக் காலத் தைத் தொடர்ந்து 2001 டிசம்பரில் இருந்து 2004 ஏப்ரல் வரை ரணிலின் அரசு அதி காரத்தில் இருந்தது. அச்சமயத்தில் விடுதலைப் புலிகளோடு யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, ஆறு சுற்று அமை திப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட் டன. அவ்வேளைகளில் எல்லாம் ஈ.பி.டி. பி. உட்பட பல தரப்புகளை இலங்கை அரசாங்கம் துணைப்படையாக பயன் படுத்துகின்றது என்று சர்வதேச அரங்குக ளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக ளில் இருந்து ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் வரை புலிகளும் தமிழர் தரப்பும் தொடர்ந்து குற்றச்சாட்டு முன் வைத்து வந்தனர். ஆனால் இலங்கை அரசுத் தரப்பு அதை மறுத்து வந்தது.

இப்போது ஒரு பிஸ்டலுக்காக டக் ளஸை நீதிமன்றக் குற்றவாளி கூண்டில் ஏற்றி விசாரிக்க முற்பட்டால், அந்தச் சமயத்தில் துணைப்படை இயங்கியமை பற்றிய விவரங்கள் எல்லாம் அம்பலமாக கூடிய ஆபத்து இருப்பதாக அரசு தரப்புக்கு இப்போது ஆலோசனை கூறப்பட்டிருக்கி றது. துணைப் படைகளுக்கு வழங்கப் பட்ட சம்பள விடயங்கள் முற்கொண்டு பல விவரங்களும் அம்பலமாகி, கொழும் பைச் சிக்கலுக்குள் ஆழ்த்தும் என்று கூறப்படுகின்றது.

இந்த விவகாரம் வெளிப்படையாக விசாரணைக்கு போனால் அதன் பிரதி பலிப்பு ஐ.நா. மனித உரிமைகள் கவுன் ஸில் வரை ஒலிக்கும் என்று உயர் பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின் றன.

கைது செய்து வைக்கப்பட்டிருப்பவர் பிள்ளையான் அல்லர். அது – டக்ளஸ் தேவானந்தா. காலாதி காலமாக – சுமார் 25 வருடங்களுக்கு மேல் – சிங்கள அர சாங்கங்களோடு சேர்ந்து செயல்பட்டவர். அரசாங்கத்தின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் முழு ஆழமும் அறிந் தவர்.

சந்திரிகாவின் அரசின் காலத்தில் புலிகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி யிருந்த ஈ.பி.டி.பிக்கு அள்ளை கொள் ளையாக ஆயுதங்களை வழங்கும் நட வடிக்கைகள் இடம் பெற்றிருந்தன. எனி னும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி யாகி, கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளரான பின்புலத்தில் ஈ.பி.டி.பி. உட்பட ஏனைய தமிழ் குழுக்களுக்கு அரசு தரப்பினால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் கணிசமாக மீளப் பெறப்பட்டன. அந்த வகையில் டக்ளஸ் தேவானந்தா தரப்புக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களும் திரும்பப் பெறப்பட்டன என்று கூறப்படுகின்றது. அது பற்றிய பதிவுகள் டக்ளஸ் தரப்பி டம் இல்லை என்றும், அரசு தரப்பிடம் டக்ளஸினால் கையளிக்கப்பட்ட பிஸ்டல், அரசுத் தரப்பு பக்கத்தில் இருந்தே பாதாள உலகம் தரப்புக்கு கை மாறி இருக்கவும் வாய்ப்பு இருப்பதாகவும் கூடப் பேசப்படு கின்றது.

இத்தகைய சூழலில் இவ்விடயத்தை பகிரங்க நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு போவது யுத்த காலத்தில் இலங்கைப் பாதுகாப்புத்துறை பின்பற்றிய பல்வேறு நடைமுறைகள் பற்றிய விவ ரங்களை பொதுத்தளத்துக்கு கொண்டு வந்து விடும் என்ற எச்சரிக்கையும் அரசுத் தலைமைக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.

சம்பந்தப்பட்ட ஆயுதத்தை 2019 இலேயே பாதுகாப்புத் தரப்பினர் பாதாள உலக சந்தேக தரப்பிடமிருந்து கைப்பற் றினர் என்றும், ஆனால் அது தொடர்பில் டக்ளஸை 6 ஆண்டுகள் கழித்து இப் போதுதான் அவர்கள் விசாரிக்க முற்பட்டு இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகி றது.

கைது செய்யப்பட்ட டக்ளஸ் தேவா னந்தா தமது வாக்குமூலத்தைத் தமி ழிலேயே பதிய வேண்டும் என்று விடாப்பிடி யாக நிற்கின்றார். ஏற்கனவே சிங்களத் தில் தயாரான வாக்குமூலத்தில் அவர் ஒப்பமிட மறுத்துவிட்டார். ஆக, அந்த வாக்கு மூலத்தை தமிழுக்கு மொழி பெயர்த்துப் பதிந்து, அவர் ஒப்பமிடுவ தற்கு கால அவகாசம் தேவை என்பத னால்தான் 72 மணி நேரம் அவரைத் தொடர்ந்து தடுத்து வைத்து விசாரிப்ப தற்கான அனுமதியை நீதிமன்றத்திட மிருந்து புலனாய்வாளர்கள் பெற்றிருக் கின்றார்கள் என்றும் கூறப்படுகின் றது.

இந்த விடயத்தில் டக்ளஸை தொடர்ந் தும் சட்ட விசாரணைக்கு உட்படுத்து வது தேசிய பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்ற முடிவுக்கு அரசு தலைமை வருமென்றால், 72 மணி நேர முடிவில் – திங்களன்று – டக்ளஸ் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் போது, அவரை விளக்கமறியலில் வைக்கும் கோரிக் கையை பொலிஸ் தரப்பு விடுக்காமல் போகலாம் என்று சில வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன.

---

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) உகந்த முறையில் வழங்க இந்த வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்றும், திசைகாட்டிக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்லாது, அனைவருக்கும் இந்த வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் நிவா ரணம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஏதேனும் ஒரு உள்ளூ ராட்சி சபையில் இரண்டு தடவைகள் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால், அங்கு ஆட்சி மாற்றம் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஆட்சியைப் பொறுப் பேற்று மூன்றாவது வருடம் சமர்ப்பிக் கப்படும் வரவு – செலவுத் திட்டம் தோற் கடிக்கப்படும் பட்சத்தில், குறித்த உள்ளூ ராட்சி சபையின் தலைவர் இயல் பாகப் பதவியில் இருந்து விலக்கப்படு வார் என்றும் அவர் மேலும் கூறியுள் ளார்.

---

## பிள்ளையார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..) அண்மைக்காலமாக குறித்த பகுதி யில் உள்ள பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள விடாது தடுத்து வந்த தொல்பொருள் திணைக்களம் சில ஆண்டுகளுக்கு முன் தொல்பொருள் பிரதேசம் என பெயர்ப்பலகை இட்டிருந்ததோடு, அங்கு உள்ள பிள்ளையார் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கியிருந்தது.

அங்கிருந்த பிள்ளையார் ஆலயத் தின் கட்டுமானப் பணிகளையும் இடை நிறுத்தி இருந்ததோடு, எவ்வித புனரமைப் புப் பணிகளையும் மேற்கொள்ள விடாது தடை செய்திருந்தது. எனினும், ஊர் மக்கள் கடும் பிரயத்தனத்தின் மூலம் கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சின் அனுமதியைப் பெற்று பிள்ளையார் ஆல யத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பித் தனர்.

இந்நிலையைச்சாதகமாகப்பயன்படுத் திய தொல்பொருள் திணைக்களம், அங்கிருந்த எண்கோண மண்டபத் தைத் தாம் புனரமைத்தால் மக்கள் எதிர்ப் புத் தெரிவிக்கமாட்டார்கள் என்பதனை அறிந்து எண்கோண மண்டபத்தில் விகாரை அமைக்கும் பணியை மேற் கொண்டு வருகின்றது.

இதேவேளை, இந்த எண்கோண மண்டபம் இருந்த பகுதியில் இருந்து கடந்த காலத்தில் எண்கோண வடிவி லான சிவலிங்கம் ஒன்று மீட்கப்பட்டு, எல்லப்பமருதன்குளம் குளக்கட்டுப் பகுதி யில் அது கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்து வரும் நிலையில் குறித்த மண்டபம் அமைந்திருந்த பகுதியிலேயே தற்போது விகாரை அமைக்கும் பணி யைத் தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த எண்கோண வடிவிலான சிவ லிங்கம் கிளிநொச்சி, குருந்தூர்மலை மற்றும் இந்தியாவின் கும்பகோணம் பகுதிகளிலும் ஆய்வுகளின் போது காணப்பட்டன என்று தொல்பொருளா ளர்கள் தெரிவிப்பதோடு, அதேபோன்ற தான சிவலிங்கமே குறிப்பிட்ட சமணங்கு ளம் பகுதியில் காணப்பட்டது என்றும், அந்த எண்கோண வடிவிலான சிவலிங் கமே குறித்த எண்கோண மண்டபத்தில் வைத்து புராதன காலங்களில் வழிபட்டு இருக்கலாம் என்கின்ற வரலாறுகள் ஆய்வு செய்யப்பட வேண்டும் என வும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்ற னர்.

இந்நிலையிலையே குறித்த இடத் தில் விகாரை அமைக்கும் பணியை தொல்பொருள் திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இதேவேளை, குறித்த பகுதியில் முழுமையாகத் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடுவலை மாநகர முதல்வரின் மெய் பாதுகாவலருக்கு பிணை



பெண் சட்டத்தரணி ஒருவரை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கடுவலை மாநகர முதல்வர் ரஞ்சன் ஜயலாலின் மெய் பாதுகாவலர், பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடுவலை மேலதிக நீதவான் அருண இந்திரஜித் புத்ததாச முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேகநபர் மன்றில் முன்னிலையாகியிருந்த நிலையில் ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணை செல்ல நீதவான் அனுமதித்தார்.

ஜி. டபிள்யூ. ஜயவர்தன என்றழைக்கப்படும் இந்த பாதுகாப்பு அதிகாரி, பெண் சட்டத்தரணி ஒருவரை அச்சுறுத்தினார் என குற்றம் சுமத்தப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



2025ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 22 லட்சத்து 98 ஆயிரத்து 987 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குவருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 519,816 ஆகும்.

மேலும், ஜெர்மனியிலிருந்து 143,999 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 178,743 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 207,510 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 105,601 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 130,452 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 107,353 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்

அத்துடன், டிசம்பர் மாதத்தின் முதல் 25 நாள்களில் 195,394 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## மீண்டும் ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றம் செல்லும் எண்ணம் இல்லை. இது பற்றி அவர் என்னிடமும் கூறியுள்ளார்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாட்டுக்கு அவரின் சேவை தேவையெனில், நாட்டுக்காக அவர் நாடாளுமன்றம் வருவார் என்றும் ராஜித குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"இந்த நாடாளுமன்றத்துக்கு ருவதில் தனக்கு எந்த ஆர்வமும் இல்லை என்று என்னிடம் ரணில் கூறியுள்ளார்.

அவர் நாடாளுமன்றத்துக்கு வந்தால், ஏதாவது செய்ய வேண்டும் என்று கூறினார். தற்போது நாடாளுமன்றத்தில் உள்ளவர்களை வைத்துக் கொண்டு என்னதான் செய்ய முடியும் என்றும் அவர் என்னிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவியை அடைந்துவிட்டேன், நான் இனி எந்தப் பதவிகளையும் எடுக்க வேண்டியதில்லை. ஆனால் நாட்டுக்கு நான் தேவைப்பட்டால், நான் வந்து கடந்த முறை போல் உதவுவேன் என்றும் அவர் என்னிடம் கூறியுள்ளார்.

நாங்கள் எங்கு சென்றாலும், மக்கள் ரணில் மீது மிகுந்த அனுதாபம் கொண்டுள்ளனர் என்று கூறுகின்றார்கள். அவர் இருந்திருந்தால், இது நடந்திருக்காது என்று அவர்கள் கூறுகின்றார்கள். அவர் இருந்திருந்தால், எங்களுக்கு ஒரு சிறந்த சூழ்நிலை இருந்திருக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதுபோன்ற கதைகள் எல்லா இடங்களிலும் உள்ளன. இரண்டு அல்லது மூன்று இடங்களில் அல்ல – பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்புகளில் இருந்து தகவல்களைக் கண்டேன். அவை அனைத்திலும், அந்த விடயம் உள்ளது." – என்றார்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் ஊடக அடக்குமுறை இடம்பெறுகின்றது என்றும் ராஜித குற்றஞ்சாட்டினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிவில் சமூகப் பிரதிநிதித்துவம்

நாட்டின் உயர்ந்த பதவிப் பொறுப்புகளுக்குத் தகுதியானவர்கள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்பதில் அரசமைப்புக் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரும் விடாப்பிடியாக நிற்பதால் அரசாங்கம் தான் நினைத்த அரசியல் நியமனங்கள் பலவற்றை செய்ய முடியாமல் தடுமாறுகின்றது என்பது கண்கூடு.

தகுதியற்றவர்களைகணக்காய்வாளர்நாயகம்பதவிக்குநியமிப்பதற்கு நான்கு தடவைகள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வழங்கிய பரிந்துரைகள், இந்த சிவில் சமூகப் பிரதிநிதிகளின் உறுதியான நிலைப்பாட்டினால் நிராகரிக்கப்பட்டு விட்டன.

ஆனால் இந்த மூன்று பிரதிநிதிகளின் பதவிக்காலமும் இன்னும் ஐந்து நாள்களில் - வரும் வெள்ளிக்கிழமை இரண்டாம் திகதியோடு - காலாவதியாகின்றது. இனிமேல் அந்த இடத்திற்கு தங்களுக்கு விருப்பமானவர்களை நியமிப்பதன் மூலம் அரசமைப்பு கவுன்ஸிலில் தமக்குத் தேவையான பெரும்பான்மையை உறுதிப்படுத்திக் கொண்டு, அரசாங்கம் பிற உயர் பதவிகளுக்கு கண்மூடித்தனமான நியமனங்களை மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிட்டும் என ஊகிக்கப்படுகின்றது.

சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உட்பட 10 உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸிலில் அங்கம் பெறும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரும் மேன்மையானவர்களாக, நேர்மை மற்றும் அரசியல் சார்பற்ற அந்தஸ்து உடையவர்களாக இருக்க வேண்டும் என்று அரசமைப்பு வலியுறுத்துகிறது.

அரசமைப்பு ஏற்பாடுகளின் படி இந்த மூவரையும் தெரிவு செய்யும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. ஆனால் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கத்தோடுதான் இந்த நியமனத்துக்கு உரியவர்களை சபாநாயகர் தெரிவு செய்ய வேண்டும் என்று அரசமைப்பு கட்டுப்பாடு விதிக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கமும் பெறப்பட வேண்டும் என்ற ஏற்பாடு இருப்பதனால் கட்சி சார்பற்றவர்களை - நடுநிலையானவர்களை - மேன்மையான பண்புடையவர்களை - சபாநாயகர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்க வேண்டி இருக்கும்.

அது மாத்திரமல்லாமல், ஏற்கனவே கவுன்ஸிலில் உள்ள உறுப்பினர்களின் மொழி, இன, மத, பால் பிரதிநிதித்துவங்களை உள்வாங்கி, அந்த அடிப்படையில் பிரதிநிதித்துவம் பெறாத தரப்புகளுக்கு இந்த சிவில் சமூக பிரதிநிதிகள் நியமனத்தை சபாநாயகர் வழங்க வேண்டும் என்பதும் ஒரு வழக்காறாகும். உதாரணத்துக்கு தற்போதைய சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரும் தங்கள் பதவிக் காலத்தை முடித்தால், எஞ்சிய ஏழு பேரில் மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இல்லை. ஆகையினால் புதிய உறுப்பினராக தெரிவு செய்யப்படும் சிவில் சமூக பிரதிநிதியில் ஒருவர் மலையக சமூகத்தைச் சேர்ந்த ஒருவராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு வலியுறுத்தப்படும்.

இந்த நியமனத்தை சபாநாயகர் எவ்வாறு கையாள போகின்றார் என்பது இலங்கை அரசியலின் செல்நெறியைத் தீர்மானிப்பதில் மிக முக்கிய அம்சமாக அமையப் போகின்றது என்பது நிச்சயம்.





# யாரின் கண் அசைவில் இயங்குகிறார் சிறீதரன்?



புருஜோத்தமன் தங்கமயில்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திடீர் அபிமானிகளில் ஒருவராகத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான சிவஞானம் சிறிதரனும் மாறி நிற்கிறாரா என்கிற சந்தேகம் சில மாதங்களாக நீடிக்கின்றது. வடக்குக் கிழக்கில் கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய அரசியல் பாதையில் பயணித்த பலரும், தேசிய மக்கள் சக்தியில் சங்கமித்து புதிய தோழர்களாக உருமாறி நின்று இப்போது பொருதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவராக, அதாவது கொழும்பு மைய அரசியலுக்கான புதிய தோழராக சிறீதரனும் மாறிவிட்டாரா? என்ற கேள்விக்கான காரணங்கள் நாளும் பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

புதிய கணக்காளர் நாயகத்தைத் தேர்வு செய்வதற்கான அரசமைப்புப் பேரவையின் கூட்ட வாக்கெடுப்பில், ஆளுங்கட்சி உறுப்பினர்களோடு இணைந்து சிறீதரனும் ஆதரவாக வாக்களித்திருக்கிறார் என்பது இப்போது சர்ச்சையாகியிருக்கின்றது. ஏனெனில், சம்பந்தப்பட்ட பொறுப்புக்கு கேணல் தர இராணுவ அதிகாரியை நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், அரசமைப்புப் பேரவையில் உள்ள சிவில் பிரதிநிதிகளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எதிராக வாக்களித்து, அந்த நியமனத்துக்கான வாய்ப்பை இல்லாமல் ஆக்கினார்கள். ஆனால், இன்னொரு எதிர்க்கட்சி உறுப்பினரான சிறீதரன், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளையும் மீறி ஆளுங்கட்சி உறுப்பினர்களோடு இணைந்து ஆதரவாக வாக்களித்திருக்கிறார். இந்த விடயம் தொடர்பில், அரசமைப்புப் பேரவைக்கான உறுப்பினர் தேர்வின் போது சிறீதரனுக்கு ஆதரவாக வாக்களித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவரிடம் கேள்வி எழுப்பிய போது, இராணுவ அதிகாரிக்கு ஆதரவாக வாக்களித்தமையை சிறீதரன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலில் தன்னைவிட யாரும் அதிக பிடிப்புள்ள அரசியல்வாதி இல்லை என்று வரையறுப்பதில் சிறீதரன் கவனமாக இருந்திருக்கிறார். மாவீரர் நினைவேந்தல், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடங்கி, தமிழ்த் தேசிய விடுதலைக்கான பயணத்தில் உயிர்நீத்தவர்களை அஞ்சலிப்பதில் அவர் தவறுவதேயில்லை. அதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாக தலைநகராக இருந்த கிளிநொச்சிக்குள் இருந்து நாடாளுமன்றம் செல்லும் ஒரே தமிழ்த் தலைவர் தான்தான் என்கிற அடையாளத்தையும் தூக்கிப் பிடிப்பார். கிட்டத்தட்ட புலிகளின் அரசியல் வாரிசு தானே என்று நிறுவ அவர் கடும் பிரயத்தனப்படுகின்றார். உணர்ச்சிமிக்க தமிழ்த் தேசிய உரைகளையெல்லாம் சிறீதரன் அடிக்கடி ஆற்றுவர். அதற்கான மேடைகளை சில மாதங்களுக்கு ஒருமுறை அவர் ஏற்பாடும் செய்து கொள்வார். தன்னைவிட யாரும் புலிகளின் வாரிசு என்று முன்னிறுத்தினால், அவர்களை நோக்கி துரோகி அடையாளத்தை பூசுவதிலும் தயங்காதவர். கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்களை நோக்கியே துரோகிப் பட்டியலை வாசித்தவர்களின் சிறீதரன் முதன்மையானவர். ஏனெனில், சிறீதரன் போன்று, முன்னணியின் தலைவர்களும் தாங்களே புலிகளின் வாரிசுகள் என்பதை நிறுவ பிரயத்தனப்படும் தரப்பினர். அந்தப் போட்டியில், சிறீதரனும் - முன்னணியினரும் தொடர்ச்சியாக போட்டி போட்டு வந்திருக்கிறார்கள். அப்படியான நிலையில், இராணுவ கேணல் தர அதிகாரியை ஆதரித்து வாக்களித்த சிறீதரனின் நிலைப்பாடு எந்தத் தமிழ்த் தேசிய சித்தாந்தத்தில் இருந்து வந்தது என்று தெரியவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு சார்பாக சிறீதரன், அரசமைப்புப் பேரவைக்குள் ஏற்கனவே சில தடவைகள் ஆதரவாக செயற்பட்டிருக்கிறார். அப்போது அவரது கட்சிக்குள் விமர்சனங்கள் எழும்பியதும், அவர் அரசமைப்புப் பேரவைக்குள் தான் எடுக்கும் முடிவுகள் சார்ந்து கட்சி கேள்வி எழுப்ப முடியாது என்ற தோரணையில்

தொடர்ச்சி▼

# யாரின் கண் அசைவில் இயங்குகிறார் சிறீதரன்?

**தொடர்ச்சி▲**

பதிலும் அளித்திருக்கின்றார். ஆனால், இப்போது இராணுவக் கேணலுக்கு ஆதரவாக வாக்களித்த விடயம் அரங்கிற்கு வந்து இரண்டு வாரங்களாகும் நிலையிலும் அமைதியாக இருக்கிறார். சமூக ஊடகங்களில் சிறீதரனுக்கு ஆதரவாக சிலர் பதிவுகளை எழுதினாலும், அவர் தன்னுடைய வாயைத் திறக்கிறார் இல்லை. இராணுவ கேணலுக்கு ஆதரவாக வாக்களித்த விடயத்தை கஜேந்திரகுமாரிடம் மாத்திரம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இராணுவ மயமாக்கல், அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக தமிழ்த் தேசிய அரசியல் எப்போதுமே மூர்க்கத்தோடு தன்னுடைய அரசியல் செயற்பாட்டினை வைத்துக் கொண்டிருக்கின்றது. அதன் ஒருகூறாக நிற்க வேண்டிய சிறீதரன், இராணுவ மயமாக்கலுக்கு ஆதரவாக தென் இலங்கையின் சக்திகளோடு நின்று இயங்குவது என்பது அப்பட்டமான காட்டிக் கொடுப்பாகும். மாவீரர்களுக்கு தீபங்களை ஏற்றிவிட்டு அடுத்த சில மணி நேரங்களிலேயே இராணுவக் கேணலுக்கு பதவி வழங்குவதற்கு ஆதரவாக வாக்களிக்கும் போது, அந்த மாவீரர்களின் ஆன்மாக்கள் சிறீதரனை எப்படி நோக்கும்? சிறீதரன், வாக்கு அரசியலில் முன்னிலை பெறுகிற ஒருவர். அதற்காக எதனையும் செய்யவும் தயங்காதவர். அப்படிப்பட்ட சிறீதரன், இராணுவக் கேணலுக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார் என்பதுவும், தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது முதல், அரசாங்கத்தோடு அவர் காட்டி வரும் கொழும்பு மைய இணக்கமும் சந்தேகங்களை இன்னும் இன்னும் அதிகரிக்கின்றது.

வழக்கமாக, அரசமைப்புப் பேரவைக் கூட்டங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், சிவில் பிரதிநிதிகளும் புதிய நியமனங்கள் தொடர்பில் மிகக் கவனம் செலுத்தி ஆராய்ந்து முடிவெடுப்பார்கள். ஏனெனில், புதிய நியமனங்களுக்கான உறுப்பினர்களை ஆளுங் கட்சி பரிந்துரைப்பதால், அவை தொடர்பில் ஏனைய தரப்பினர் கவனமாக இருப்பது இயல்பு. ஆனால், சிறீதரன் தான் எதிர்க் கட்சிகளின் பிரதிநிதி என்ற நிலையை மறந்து, ஆளுங்கட்சி உறுப்பினராக செயற்படுகிறார் என்கிற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக எழும்போது, அவரை நோக்கிய சந்தேகங்கள் வலுப்பெறுவதை யாரினாலும் தவிர்க்க முடியாது. அது அவருக்கும் தெரிந்திருக்கும். தெரிந்தும், அவர் தொடர்ந்தும் ஆளும் அரசாங்கத்துக்கான ஆதரவு நிலைப்பாட்டினை எடுக்கிறார் என்றால், அவரின் செயற்பாடுகளுக்கு நம் கண்களுக்கு தெரியாத ஏதோவொரு கட்டளை இருப்பதாக எடுக்கக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

அரசமைப்புப் பேரவைக் கூட்டங்கள் அதிகம் சிங்களத்திலேயே நடைபெறுகின்றன. மொழி பெயர்ப்பு வசதிகளும் இருக்கும். சிறீதரன் மொழிபெயர்ப்பு வசதிகள் இல்லாததால் மாறி வாக்களித்து விட்டேன் என்று ஓரிருமுறை சொல்லலாம். ஆனால், அவர் தொடர்ச்சியாக யாரினதோ கண்ணசைவுக்கு இசைந்து வாக்களிப்பது போல செயற்படுகின்றார் என அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர் ஒருவர் சிறீதரன் மீதான அபிப்பிராயத்தை உரையாடலொன்றின் போது முன் வைத்திருக்கிறார். அதிலும், இராணுவக் கேணலுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் சிறீதரனுக்கு சிலர் தமிழில் தெளிவுபடுத்தல்களை வழங்கிய பின்னரும், அவர் ஆளுங்கட்சியினரோடு நின்றிருக்கிறார் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தரப்புக்களுக்குள் காணப்படும் முரண்பாடுகள், போட்டி பொறாமைகள், போதாமைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி உரையாடல்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது, தென் இலங்கையின் சக்திகளும், பிராந்திய வல்லரசின் கருவிகளும் தமிழ் மக்களுக்குள் தெளிவாக ஊடுருவி விட்டன. அப்படியான தருணத்தில், பொது எதிரியையும், பிராந்திய வல்லரசுகளையும் எம்மிடம் இருந்து அகற்றுவதுதான் எமது முதல் பணி, அதில் கவனம் செலுத்துவதுதான் நல்லது என்று தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் பலரும் எண்ணிச் செயற்படுகிறார்கள். அதிலும், கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் கண்ட பின்னடைவு, தென் இலங்கைச் சக்திகளை நோக்கிய எதிர்வினையை கூர்மைப்படுத்த வேண்டும் என்கிற உண்மையை மண்டையில் உறைக்கும் அளவுக்குச் சொன்னது. அப்படியான கட்டத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகள், தரப்புக்களுக்குள் இருக்கும் குழறுபடிகள் தொடர்பில் பெரிதாக யாரும் அலட்டிக் கொள்வதில்லை. கிட்டத்தட்ட கண்டும் காணாமல் இருந்தார்கள். ஆனால், இந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இயங்கும் தரப்பினர் சிலர், கொட்டம் போடுகிறார்கள். எல்லோரும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவு, தென் இலங்கைச் சக்திகளை எதிர்ப்பு என்று நிற்கிறார்கள். இதற்குள் யார் தங்களின் தகிடுதத்தங்களை கவனிக்கப் போகிறார்கள் என்று நினைத்துவிட்டார்களோ தெரியவில்லை. அவர்களின் முதன்மையானவராக சிறீதரனும் மாறிவிட்டாரா? தன்னைச் சுற்றி சின்ன விமர்சனங்கள் எழுந்தாலும் முந்தி அடித்துக் கொண்டு விளக்கம் கொடுக்கும் அவர், இராணுவக் கேணலக்கு ஆதரவாக வாக்களித்த விடயம் அரங்கிற்கு வந்து காலங்கடக்கும் போதும் பேரமைதி பேணுகிறார். தன் மீதான விமர்சனங்களையே தன்னை நோக்கிய அனுதாப நிலைப்பாடுகளாக மாற்றக் கூடிய பேச்சாற்றல் அவருக்கு உண்டு. கடந்த காலங்களில் அவற்றை நாம் கண்டிருக்கிறோம். ஆனால், இப்போது அவர் பேணும் பேரமைதி எந்த ஆணைகளுக்கு அடிபணிந்தமையினால் நிகழ்வது?

அரசமைப்புப் பேரவைக்குள் நிலைப்பாடுகளை எடுப்பது சார்ந்து சிறீதரனுக்கு தனியுரிமை இருக்கலாம். அதற்கான அதிகாரத்தை அவரின் பதவி வழங்கலாம். ஆனால், அந்தத் தனியுரிமை, தமிழ்த் தேசிய அரசியலின் தார்மீகங்களுக்கு அப்பாலானது இல்லை. இராணுவ மயமாக்கலுக்கு எதிராக நாளும் பொழுதும் போராடிக் கொண்டிருக்கும் தரப்புக்குள் இருந்து வந்த ஒருவர், ஆளுங்கட்சியோடு இணைந்து இராணுவக் கேணலுக்கு வாக்களித்தமை என்பது, சிறீதரனின் மொழியில் சொன்னால் துரோகத்தனமானது. இந்த விடயம் தொடர்பில் அவர் தொடர்ந்தும் மௌனம் சாதிக்க முடியாது. காலத்தைக் கடத்துவதன் மூலம், விடயம் மக்களின் மனங்களில் இருந்து மறைந்துவிடும், திரும்பவும் தமிழ்த் தேசிய வேடம் போடலாம் என்று சிறீதரன் நினைத்தால், அது அவருக்கு எதிராகவே திரும்பும். ஏனெனில், அவரின் மீதான நம்பிக்கையை தமிழ்த் தேசியத் தரப்புக்கள் இழந்தால், அது அவருக்கு நல்லது இல்லை. மீண்டும் சொல்லிக் கொள்வது, அரசமைப்புப் பேரவைக்குள் அநுரவினதோ, பிமலினதோ கண்ணசைவில் செயற்படவில்லை, தனித்து சுயமாக செயற்படுகிறேன், தமிழ்த் தேசியத்துக்கான தார்மீகங்களைக் கடைப்பிடித்திருக்கிறேன் என்று சிறீதரன் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபித்தாக வேண்டும். அதுதான் அவருக்கும், தமிழ்த் தேசிய அரசியலுக்கும் நல்லது.



# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினர் திருக்கோவிலில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம், அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் நேற்று சனிக்கிழமை வருட இறுதிப் போராட்டத்தை

உணர்வு பூர்வமான ஆர்ப்பாட்டமாக நடத்தியது.

போராட்ட களத்தில். பலவித பதாதைகளுடன் காணப்பட்ட சங்கத் தலைவி த.செல்வராணி அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

நாங்கள் இன்று வருட இறுதியில் ஒன்று கூடி இருக்கின்றோம். எங்களது போராட்டம் 2026இலும் எங்களது உறவுகளுக்கான நீதி கிடைக்கும் வரை தொடரும்.

எங்களது உறவுகளை தேடி இன்று போராட்டத்தில் காத்திருந்தவர்களில் 450 பேருக்கு மேற்பட்ட தாய்மார்களே கூடியுள்ளனர்.

நாங்கள் கேட்பது எங்கள் விலைமதிப்பற்ற உயிர்களை.

எமது போராட்டம் சர்வதேசம் வரை சென்றுள்ளது. நீதி கிடைக்கும் வரை இன்னமும் தொடருவோம்.

இன்று தையிட்டியில் எமது நிலங்களை கேட்டால் அடித்து உதைக்கிறார்கள். மத குரு என்று பார்க்காமல் வேலன் சுவாமியை அடித்து இழுத்து கைது செய்துள்ளார்கள்.மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்த இலங்கை நாட்டில் எமக்கு உண்மையான ஒரு பாதுகாப்பில்லை . எங்கள் நிலங்கள் எங்களுக்கு வேண்டும். – என்றார்.



















# முன்னேஸ்வரத்தில் ஐயப்பன் தேர்

**(உடப்பு நிருபர்: க.மகாதேவன்)**

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ ஹரி ஹரசுதன் ஐயப்ப சேவாசங்கத்தின் 30 ஆவது மண்டல பூஜையும், ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் தேர் பவனியும் நேற்று நடைபெற்றன.பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் இதன் போது கலந்து கொண்டு ஐயப்ப சுவாமியின் அருளைப் பெற்றுக் கொண்டனர்.









# சமஷ்டியை ஒருபோதுமே தமிழரசு விட்டுக் கொடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இளையதம்பி சிறிநாத் உறுதி

**(கனகராசா சரவணன்)**

பிராந்திய அரசியலில் இந்தியாவை மீறி எந்த விடயங்களையும் செய்ய முடியாது என்பது கடந்த கால அரசியல் போராட்ட வரலாற்றில் எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆக குறைந்த தீர்வாக இந்தியா கொண்டு வந்த 13 ஆவது திருத்த சட்ட மாகாண சபை அதிகாரத்தைப் பெற்று, அதை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு, அடுத்த கட்ட நகர்வுகளை செய்ய வேண்டும். அதே வேளை தமிழ் மக்களின் மிக முக்கியமான கோரிக்கை சமஷ்டு. அதனை தமிழரசுக் கட்சி ஒர. போதும் விட்டுக்கொடுக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2025 முடிந்து 2026 ஆரம்பிக்கின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் எதிர்பார்ப்புக்கள், அபிவிருத்தி விடயங்கள், வாழ்வாதாரங்கள் முற்றுமுழுதாக கொண்டு செல்லப்பட்டுள்ளனவா என்று பார்த்தால் ஓர் ஏமாற்றமான நிலைமையே மிஞ்சி இருக்கின்றது.

2025 புயல் ஏற்பட்டு தமிழ் மக்களுடைய பிரதேசங்களிலும் அனர்த்தங்களினால் மிகப் பெரிய அளவு அடிப்படைக் கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. போர்க்காலப் பகுதியில் சிதைக்கப்பட்ட கட்டுமானங்களை மீளமைத்து, இன்னும் மீண்டெழ முடியாத அளவுக்கு தமிழ் மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற வேளையிலே, போருக்கு பின்னராகஜ் கூட வடக்கு, கிழக்கிலே பாரியளவு நிவாரணப் பணிகள், மீள் கட்டுமானங்கள், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான எந்தவிதமான விசேட செயல்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இன்று இந்த புயல் தமிழ் மக்களின் பிரதேசங்களையும் தமிழ் மக்களையும் புரட்டிப் போட்டு அவர்களுடைய அனைத்து நிலைமைகளியும் மேலும் மோசமடையச் செய்திருக்கின்றது.

இந்த அரசாங்கம் இந்த விடயத்தை எவ்வாறு தமிழ் மக்களுக்காக முற்கொண்டு செல்ல போகின்றது அல்லது வழமை போலவே ஒட்டுமொத்தமாக முழு இலங்கைக்குமான செயல்திட்டங்கள் என்ற அடிப்படையிலே வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு மிகக் குறைந்த அளவான விடயங்களை கிள்ளி தெளித்துவிட்டு எல்லோருக்கும் நாங்கள் சமமாக கொடுக்கின்றோம் என்று சொல்லி விடப்போகின்றதா என்ற ஐயப்பாடும் இருக்கின்றது.

ஜனாதிபதி நிறைய விடயங்களை



மக்களுக்கு எல்லா விடயங்களும் கொண்டு செல்லப்படும் என்கின்றார். ஆனால் அந்த நிலைமைகள் மிக விரைவாக கொண்டு செல்லப்படுகின்றனவா? சிதைந்து போன எங்களுடைய பிரதேசங்களில் அபிவிருத்திக்கான பணிகள் முழுமையாகக் கொண்டு செல்லப்படுமா? ஏற்கனவே நாம் இந்த வருடத்திலேயே நாடாளுமன்றத்திலே தமிழ்ப் பிரதேசங்களில் கட்டுமானங்கள் சம்பந்தமாகப் பல விடயங்களை முன்வைத்திருந்தோம்.

அவற்றைக் கூட முழுமையாக செய்ய முடியவில்லை. இந்த புயல் அனத்ததினால் இழக்கப்பட்ட பாரியளவு விடயங்கள் மீளளிக்கப்படுமா என்பதை பொறுத்திருந்துதாப் பார்க்க வேண்டும். அதற்கு அப்பால் மிக முக்கியமாக தமிழ் பிரதேசங்களிலே தமிழ் மக்களின் பல அடிப்படை விடயங்கள் மீறப்பட்டு இருக்கின்றன.

யாழ் தையிட்டி விஹாரை விவகாரம், திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் போன்றவை கூட சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படாது ஏதோ சாக்கு போக்கு சொல்லி விடயங்கள் கையாளப்படுகின்றன. அவ்வாறே தமிழ் பிரதேசங்களில் தொல்பொருள் விடயங்கள் என்ற அடிப்படையில் பதாதைகள் நாட்டப்பட்டு அவற்றை பிரதேச சபையின் ஊடாக அகற்றப்பட்டதை எதிர்த்து சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொலிஸ் திணைக்களமும் தொல்பொருள் திணைக்களமும் மும்முரமாக நிற்கின்றன.

இந்த விடயங்களை தமிழ் மக்களுக்கு பெரும் சந்தேகங்களையும் ஒரு நிர்க்கதியான நிலையையும் மனதளவில் உருவாக்கி இருக்கின்றது. அதற்கு அப்பால் அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆகக் குறைந்த தீர்வாக 13வது திருத்தத்தின் ஊடாக வழங்கப்பட வேண்டிய மாகாண சபை அதிகாரங்கள் கூட இழுத்தடிப்பு செய்யப்படுகின்றது. இந்தியாவின் ஒத்துழைப்பு, வழிகாட்டுதலுடன் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்த சட்டத்தின் ஊடான மாகாண சபை அதிகாரங்கள் கூட வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுகின்றது.

இந்த நிலையிலே இந்திய வெளிவிவகார அமைச்சர் வந்திருந்தார். தமிழரசு உட்பட தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமாக ஓர் இறுக்கமான கோரிக்கையை முன் வைத்தோம். அதனை இந்தியாவுக்கு இருக்கின்றது.

ஆக குறைந்த அந்த மாகாண சபை அதிகாரங்களைக் கூட நிலைநாட்டுவதற்கு இந்தப் புதிய அரசாங்கம் ஒரு சரியான முன்முனைப்புக் காட்டவில்லை. அதேவேளை அரசியல் தீர்வுகள் சம்பந்தமாக புதிய அரசாங்கத்தின் முன்வைப்புகள் இந்தப் பேரிடர் அனர்த்தத்தின் காரணமாக பின் போடப்படும் சூழ்நிலைகள் உருவாகிவிடுமா? அல்லது மாகாண சபை தேர்தலை பின் போட்டு, தமிழ் மக்களுக்கு அந்த அதிகாரங்களை பகிர்ந்து அளிப்பது கூட பின் தள்ளப்படுமா என்பது பார்க்க வேண்டிய விடயமாக இருக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலையிலே சமத்துவத்தைபற்றி பேசுகின்ற அரசாங்கம் - போதைப்பொருள் மற்றும் ஊழலுக்கு எதிராக மிக விரைவாக நடவடிக்கைகள் எடுக்கும் அரசாங்கம் - ஏன் தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாகவும் அபிவிருத்தி சம்ப்ந்தமாவும் பெரும் மெத்தனப் போக்கைக் காண்பிக்கின்றது எனபது கேள்வி குறியாக இருக்கின்றது.

இந்த விடயங்கள் 2026 இல் - வரப்போகின்ற புத்தாண்டில் - மிக விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம். அதேவேளை மாகாணசபை தேர்தலை மிக விரைவாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு முன் வைத்திருக்கின்றோம். கடந்த முறை ஜனாதிபதி சந்தித்தபோது கூட நாங்கள் எங்களுடைய அழுத்தமான கோரிக்கையாக அதை முன் வைத்திருந்தோம்.

சமஷ்டியை விட்டுக் கொடுப்பதாக தமிழரசுக் கட்சி எந்த இடத்திலும் கூறவில்லை. சிங்கள மக்களுக்கு அந்த வார்த்தை ஒரு நெருக்கடியாகச் சொல்லப்பட்டதால், அந்த வார்த்தைப் பிரயோகத்தை விடுத்து, அதன் உள்ளடக்கத்தை - அதிகாரத்தை - தமிழ் மக்களுக்குக் கொண்டு செல்வதற்கான பயணத்தைத்தான் தமிழரசுக் கட்சி கொண்டிருக்கின்றது.

எங்களுடைய பிராந்திய அரசியலில் இந்தியாவை மீறி நாங்கள் எந்த விடயத்தையும் செய்து விட முடியாது என்பது கடந்த கால அரசியல் போராட்ட வரலாற்றிலேயே எங்களுக்கு நன்றாக தெரியும். அந்த அடிப்படையிலே இந்தியாவின் ஏற்பாட்டில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் ஊடான இந்த மாகாண சபையை நாம் முதல் மிக வெற்றிகரமாக அமைத்து, அதன் முழுமையான அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொண்டு, அடுத்த கட்ட அரசியல் நகர்வாக சமஷ்டித் தீர்வை முன்னெடுக்க வேண்டும். அதுதான் யதார்த்த கள



# கண்டி மாவட்ட செயலக வெடிகுண்டு விவகாரம் விசாரணை பொலிஸ் கணினி பிரிவிடம் ஒப்படைப்பு

கண்டி மாவட்ட செயலகத்தில் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

5 இடங்களில் குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட செயலாளருக்கு கிடைத்த மின்னஞ்சலுக்கு அமைய சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கண்டி மாவட்ட செயலாளரினால் கண்டி பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்க செய்யும் பிரிவு, இராணுவத்தின் குண்டு செயலிழக்க செய்யும் பிரிவு உள்ளிட்ட தரப்புகள் வரவழைக்கப்பட்டு சோதனை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸர் தெரிவித்தனர்.

எனினும், சோதனைகளில் எந்தவொரு வெடிபொருள்களும் கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மின்னஞ்சல் ஊடாக குண்டு தாக்குதல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் பொலிஸ் கணினி குற்ற விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# தூர இடங்களுக்காக மேலதிக ரயில் சேவை



கொழும்புக்கு வருகை தரும் மக்களுக்காக தூர இடங்களுக்கான மேலதிக போக்குவரத்து சேவைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை முதல் காங்கேசன்துறை வரையில் நகர்சேர் கடுகதி ரயில் இன்று முதல் சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாத்தறை ரயில் நிலையத்தில் இருந்து நாளை அதிகாலை 05 மணிக்கு கொழும்பு – கோட்டை வரை விசேட ரயில் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பழம்பெரும் சிங்கள பாடகி லதா வல்பொல காலமானார்

இலங்கையின் சிங்கள இசை வரலாற்றில் “இசைக்குயில்“ என்று போற்றப்படும் லதா வல்பொல தமது 91 ஆவது வயதில் நேற்று காலமானார்.

இவர் சுமார் ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக சிங்களத் திரைத் துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஒரு சிரேஷ்ட பின்னணிப் பாடகி ஆவார்.

1934 ஆம் ஆண்டு பிறந்த இவர், தேவாலய இசைக் குழுக்களில் தனது இசைப் பயணத்தை ஆரம்பித்து, பின்னர் வானொலி மற்றும் திரைத் துறையில் ஈடு இணையற்ற இடத்தைப் பிடித்தார்.

1952 ஆம் ஆண்டு “எதா ரே“ திரைப்படத்தின் மூலம் பின்னணிப் பாடகியாக அறிமுகமான இவர், இதுவரை 600 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் ஆயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார்.

சிறந்த பின்னணிப் பாடகிக்கான “சரஸவிய” விருதுகள் உள்ளிட்ட பல தேசிய மற்றும் சர்வதேச கௌரவங்களைப் பெற்றுள்ளார்.



# மீண்டும் கனமழைக்கு எதிர்வுகூறல்: முன்னெச்சரிக்கை நடவடிக்கை தயார்



வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வு கூறல்களின்படி, நாளை திங்கள் கிழமை முதல் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், அதனை எதிர்கொள்ளத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட இது குறித்துக் கூறுகையில், முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டு, அவர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், அவசரகால மீட்புப் பணிகளுக்காகக் கடற்படை வீரர்கள், விமானங்கள் மற்றும் படகுகள் தயார் நிலையில் உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி, நாட்டின் கிழக்குப் பகுதியில் அலை போன்ற காற்று ஓட்டம் உருவாகியுள்ளது.

இதன் காரணமாக வடக்கு, வடமத்திய, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் இயல்பை விட அதிக மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடகிழக்கு பருவமழைக் காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த இடர்களைக் குறைக்கும் நோக்கில் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறும், அதிகாரிகளால் அவ்வப்போது வழங்கப்படும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் மேஜர் ஜெனரல் கொட்டுவேகொட கேட்டுக்கொண்டுள்ளார்.

# சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் கொழும்புக்கு வர விசேட பஸ்கள்



சொந்த ஊர்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் தலைநகரம் திரும்புவதற்காக இன்று முதல் விசேட போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சில மாகாணங்களில் பஸ்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான செயற்பாட்டு அதிகாரி சங்க வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம், நுவரெலியா, பதுளை, கண்டி, குருநாகல் ஆகிய மாவட்டங்களிலிருந்து வருகை தரும் மக்களுக்காக விசேட போக்குவரத்து சேவையின் ஊடாக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என அவர் கூறினார்.

# இலங்கையின் மூத்த இசை கலைஞர் மெக்சி ரொசைரோ காலமானார்



5 தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையின் மேலைத்தேய இசைத் துறையை தனது தனித்துவமான குரலால் அலங்கரித்த மூத்த கலைஞர் மெக்சி ரொசைரோ, தனது 77ஆவது வயதில் காலமானார்.

ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக இசைத்துறையில் ஈடு இணையற்ற பங்களிப்பை அவர் வழங்கியுள்ளார்.

அவரது தனித்துவமான பாடும் பாணி மற்றும் மேடை ஆற்றுகை காரணமாக அவர் இலங்கையின் இசை ரசிகர்களிடையே பெரும் புகழ்பெற்றார்.

இலங்கையில் மேலைத்தேய இசைக்கலையை வளர்ப்பதிலும், அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதிலும் அவர் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்.

# வாக்காளர் பதிவு கணக்கெடுப்பு பெப்ரவரி மாதம் முதல் ஆரம்பம்

இலங்கையில் 2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு கணக்கெடுப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஆண்டு கணக்கெடுப்பு முறையில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அதிகாரிகள் ஒவ்வொரு வீட்டுக்கும் நேரடியாகச் சென்று விபரங்களைச் சேகரிக்கும் நடைமுறை இருந்தது.

எனினும், இந்த முறை அதிகாரிகள் அனைத்து வீடுகளுக்கும் செல்லமாட்டார்கள் என்றும், வாக்காளர் பட்டியலில் மாற்றங்கள் தேவைப்படும் வீடுகளுக்கு மட்டுமே அவர்களது விஜயம் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக புதிதாக வாக்காளர் பெயர்களைச் சேர்த்தல் மற்றும் நீக்கப்பட வேண்டிய பெயர்களைக் கொண்ட “அ” மற்றும் “ஆ” பட்டியல்களில் திருத்தங்கள் செய்ய வேண்டிய அவசியம் உள்ள வீடுகளுக்கு மட்டுமே அதிகாரிகள் செல்ல உள்ளதுடன், அவ்வாறு விபரங்கள் சேகரிக்கப்பட வேண்டிய வீடுகளில் மட்டுமே கணக்கெடுப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

இந்தச் செயல்முறையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கணக்கெடுப்புப் பணிகளை நேரில் பார்வையிடவும், வாக்காளர் தகுதி குறித்து அதிகாரிகள் வழங்கும் பரிந்துரைகளைக் கண்காணிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்புப் பணியின் போது ஏதேனும் முறைகேடுகள் நடப்பது கண்டறியப்பட்டால், அரசியல் பிரதிநிதிகள் அது குறித்து எழுத்துப்பூர்வமாக கணக்கெடுப்பு அதிகாரியிடம் முறைப்பாடளிக்கலாம்.

அதன் நகல் ஒன்றை உடனடியாக சம்பந்தப்பட்ட மாவட்ட பிரதி அல்லது உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

PAFFREL




# புதுக்குடியிருப்பு வெள்ளத்தைத் தடுக்க வடிகாலமைப்பு இரணைப்பாலையூடாக மாத்தளன் சிறுகடல் வரையில்!

## யோசனைத் திட்டத்தை முன்மொழிந்தார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

ஒவ்வோர் ஆண்டும் மழைக்காலங்களில் புதுக்குடியிருப்பு நகர் வெள்ளத்தில் மூழ்குவதால் வர்த்தகர்களும், புதுக்குடியிருப்பு நகரை அண்டியுள்ள பொது மக்களும் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வெள்ள அனர்த்தத்தால் ஏற்படும் நெருக்கடியைத் தடுக்க புதுக்குடியிருப்பு நகரிலிருந்து இரணைப்பாலை வீதியினூடாக, மாத்தளன் சிறுகடல் வரையில் வடிகாலமைப்பு மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பிரேரணை ஒன்றை முன்மொழிந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினரால் இந்தப் பிரேரணை முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த வடிகாலமைப்புத் தொடர்பில் வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளரின் ஆலோசனையினையும் இதன்போது அவர் கேட்டறிந்துகொண்டார்.

பொறியியலாளர் இதன்போது கருத்துத் தெரிவிக்கையில் –

புதுக்குடியிருப்பு நகரிலிருந்து இரணைப்பாலை ஊடாக மாத்தளன் சிறுகடல் 3.5கிலோமீற்றர் தூரமாகும். எனவே வீதியின் இருபுறமும் வடிகாலமைப்பு



மேற்கொள்வதானால் 07கிலோமீற்றர் வடிகாலமைப்புச் செய்யப்படவேண்டியிருக்கும்.

ஏழு கிலோமீற்றர் வடிகாலமைப்பை மேற்கொள்வதானால் பாரியதொரு நிதி ஒதுக்கீடு தேவைப்படும்.

அத்தோடு புதுக்குடியிருப்பு நகரிலிருந்து மாத்தளன் சிறுகடல்வரையில் வடிகாலைமைப்பை மேற்கொள்வதற்குரிய திட்ட முன்மொழிவொன்று எம்மால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை நாடாளுமன்ற உறுப்பினரிடம் நாம் சமர்ப்பிக்கவும் தயாராக இருக்கின்றோம் – என்றார்.

இந்நிலையில் ரவிகரன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

ஒவ்வோர் ஆண்டும் மழைக்காலங்களில் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டிருக்கின்றது. பாரிய நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது என்பதற்காக வடிகாலமைப்பை மேற்கொள்ளாமலிருக்க முடியாது. புதுக்குடியிருப்பு நகரிலிருந்து மாத்தளன் சிறுகடல்வரையான வடிகாலமைப்பு வசதியை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்.

பாரியநிதி தேவைப்பட்டால் அதனை அரசாங்கத்திடமிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்வோம். அதற்காகவே மக்கள் எம்மை தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்துள்ளனர். இந்த வடிகாலமைப்புத்திட்டத்தை ஒரே தடவையில் மேற்கொள்ள முடியாவிட்டால் கட்டங்கட்டமாக இந்த வடிகாலமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

எனவே புதுக்குடியிருப்பு நகரிலிருந்து மாத்தளன் சிறுகடல்வரையில் வடிகாலமைப்பு மேற்கொள்ளப்படவேண்டுமெனப் பிரேரணை ஒன்றை முன்மொழிகின்றேன். இந்தப் பிரேரணை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவிற்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

அந்தவகையில் இந்த வடிகாலமைப்பினை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியையும் பெறுவோம்.

அதன்பிற்பாடு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதியுடனும், முறையான திட்டமுன்மொழிவுடனும் இந்த வடிகாலமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையை உரிய அமைச்சிற்கு அனுப்பி வைப்போம் – என்றார்.












# யாழ். பல்கலை உடற்கல்வி டிப்ளோமா மாணவர்களால் இரத்ததான நிகழ்வு!

யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களால் ஒழுங்கு செய்யபட்டு இரத்ததான முகாம் நேற்று இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய உதவிப்பணிப்பாளர், பேராசிரியர் சபா ஆனந்த், கலாநிதி கேதீஸ்வரன் மற்றும் விரிவுரையாளர்களின் உட்படப் பலர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

இதில் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.





# என்னோடு நேருக்கு நேர் மேடை ஏறத் தயாரா? முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு பழனிசாமி சவால்

அ.தி.மு.க. ஆட்சி பற்றி நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயார். தி.மு.க. ஆட்சி பற்றி எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லத் தயாரா?.என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி சவால் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“கள்ளக்குறிச்சியில் மேடை ஏறி “ஓபன் சேலஞ்ஜ்“ விடுத்த முதல்வரே. நீங்கள் மேடை போட்டு பேசிய அந்த கள்ளக்குறிச்சி மாவட்டமே எனது தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் தான் உருவானது என்பது உங்களுக்கு தெரியுமா, தெரியாதா?

நீங்கள் நின்றுப் பேசிய அதே கள்ளக்குறிச்சியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி சொல்லும், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் சாதனை என்னவென்று. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் திட்டங்களுக்கு ரிப்பன் வெட்டி ஸ்டிக்கர் ஒட்டுவதையே 95 வீத வேலையாகக் கொண்ட நீங்கள், 5 வீத திட்டங்கள் பற்றி எல்லாம் கேள்வி கேட்கலாமா? அதற்கு கொஞ்சமாவது உங்களுக்கு தகுதி இருக்கிறதா?

தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கை, பெண்கள் பாதுகாப்பைச் சீர்குலைத்துவிட்டு, எங்கு திரும்பினாலும் ஆசிரியர்கள், தாதியர்கள், அரசு ஊழியர்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைவரையும் நடுத்தெருவில் போராட நிறுத்திவிட்டு, காலரை தூக்கிப் விட்டு பேசுகிறீர்களே. உங்களுக்கு கொஞ்சம் கூட வெட்கமாக இல்லையா?




20 லட்சம் மாணவர்களுக்கு “லப்டப்” என்று போகிற போக்கில் அளந்து விட்டால் மக்கள் நம்பி விடுவார்களா? எத்தனை “லப்டப்” யாருக்கு போய் சேர்ந்தது? தேர்தல் பயத்தில், நான்கரை ஆண்டுகள் கொடுக்காமல் தற்போது அவசர கதியில் அரைகுறையாக கொடுக்கப் போவதை பெருமை பேச உங்களுக்கு கூச்சமாக இல்லையா?

அ.இ.அ.தி.மு.க .ஆட்சி பற்றி நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதில் சொல்லத் தயார். தி.மு.க. ஆட்சி பற்றி எனது கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லத் தயாரா?” எனத் தெரிவித்துள்ளார்.

# விஜய், சீமான் ஆகியோர் ஆர்.எஸ்.எஸ். முகமூடிகள்

## திருமாவளவன் குற்றச்சாட்டு

பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ். செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்களாக முகமுடி அணிந்து விஜய்யும், சீமானும் வந்துள்ளார்கள் என்று வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் வி.சி.க. தலைவர் திருமாவளவன் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

“எதிர்க்கட்சிகள் கூட்டணியாக உருவாக முடியாத அளவுக்கு சிதறி கிடக்கிறார்கள். ஒருமித்த கருத்து அவர்களுக்குள் ஏற்படவில்லை. கூட்டணியாக உருவாகாத நிலையில், தி.மு.க. கூட்டணியை வீழ்த்துவோம் என அன்புமணி ராமதாஸ் கூறுவது நகைப்புக்குரியது. பா.ம.கவின் ஓர் அணி தி.மு.க. கூட்டணிக்கு வரும் என கூறுவது வெறும் யூகம் தான். அதற்கு நான் பதிலளிக்க முடியாது.

தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை அலட்சியப்படுத்தாமல் பரிசீலித்து அதை நிறைவேற்ற முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல ஆசிரியர்கள் – அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தி.மு.கவுக்கு வி.சி.க. பரிந்து பேசுவதாக சிலர் விமர்சனம் வைத்ததால், கொள்கைதான் எங்களுக்கு முதன்மையானது கூட்டணி இரண்டாம்பட்சம் தான் என்பதைதான் நான் கூறினேன். தமிழ்நாட்டில் பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ். சக்திகள் வளர அ.தி.மு.க. உதவுகிறது. சிலர் அதற்கு துணை போகிறார்கள். அவர்கள் மதவெறியர்களை காலூன்று வைக்கப் போகிறார்கள். மற்ற மாநிலங்களில் நடந்த அவலம் தமிழ் நாட்டிலும் நடக்கும் காலம் இனி வெகு தூரத்தில் இல்லை.

நான் பெரியார் – அம்பேத்கரின் பிள்ளை. சனாதான சக்திகளுக்கு துணை போகும் வகையில் சீமானும், விஜய்யும் செயல்படுகிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர்களின் செயல்பாடுகள் பா.ஜ.கவுக்கு ஆதரவாக உள்ளது. இதனை தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் தேசியம் பேசுவது போல் சீமானும், பெரியார் குறித்து பேசுவது போல் விஜய்யும் நாடகமாடுகிறார்கள்.

கொள்கை எதிரியான பா.ஜ.கவை விஜய் விமர்சிக்கவில்லை, கண்டிக்கவில்லை. பெரியார் அரசியல் என்பது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான அரசியல், விளிம்புநிலை



மக்களுக்கான அரசியல். அதை தகர்ப்பேன் என்று சீமான் கூறுவது இவரே ஆர்.எஸ்.எஸின் கடப்பாரையாக மாறியுள்ளார் என்பதை தான் காட்டுகிறது. அவர் பேசுவது தமிழ் தேசிய அரசியல் அல்ல, சனாதன அரசியல். பிராமண கடப்பாரையை கொண்டு திராவிடத்தை தகர்ப்பேன் எனக் கூறுவது தி.மு.கவுக்கு எதிரான அரசியல் அல்ல, நாம் எல்லோரும் பேசும் அரசியலுக்கு எதிரானது.

பெரியார்– அம்பேத்கர் – இடதுசாரி அரசியலுக்கு எதிரானது. பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களாக முகமுடி அணிந்து விஜய்யும் சீமானும் வந்துள்ளார்கள். தமிழ்நாட்டில் பா.ஜ.க. இந்தளவிற்கு ஆட்டம் போட காரணமே அ.தி.மு.க தான். பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தது அ.தி.மு.க. செய்த மிகப் பெரிய தமிழ் இன துரோகம்.

பா.ஜ.க. இங்கு வலுப்பெற்றால் அ.தி.மு.க. இல்லாமல் போய்விடும். பா.ஜ.க. உடன் கூட்டணி வைத்திருந்தபோது மதவாத அரசியலை பேசக் கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளை விதித்துதான் கருணாநிதி கூட்டணி வைத்தார். பா.ஜ.க. உடன் கூட்டணி வைத்திருந்த போதுதான் ராமர் எந்த கல்லூரியில் இன்ஜினியரிங் படித்தார் என்று கேட்டார்.

கூட்டணி வைத்திருந்த போதும் தனது கருத்தியலில் உறுதியாக இருந்தார். ஆனால் தற்போது பா.ஜ.க உடன் கூட்டணி வைத்துள்ள அ.தி.மு.கவினர் பா.ஜ.கவின் கருத்தியல் அடிமையாகி விட்டார்கள். பா.ஜ.கவின் அரசியலை அ.தி.மு.கவினர் பேசுகிறார்கள். இது தமிழ்நாட்டிற்கு உகந்தது அல்ல.” என்று தெரிவித்துள்ளார்.

# தாய்லாந்து - கம்போடியா இடையே உடன் அமுலாகும் போர் நிறுத்தம்



தாய்லாந்து – கம்போடியா இடையே உடன் அமுலாகும் வகையில் போர் நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இருநாட்டுபாதுகாப்புஅமைச்சர்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டு நேரப்படி நேற்று மாலை 05 மணி முதல் தாய்லாந்து மற்றும் கம்போடியா இடையே 72 மணித்தியால போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்தினால் சிறை பிடிக்கப்பட்ட 18 கம்போடிய வீரர்கள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் எல்லையில் நீடித்த இராணுவ மோதல்களினால் இதுவரை 41 பேர் உயிரிழந்ததுடன், மில்லியன் கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

இந்நிலையில் எல்லைப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மீண்டும் வீடு திரும்புவதற்கு இருநாட்டு இராணுவத்தினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்..

கம்போடியாவிடமுள்ள தமது நாட்டின் பிராந்தியங்களை மீள கைப்பற்றும் நோக்கில் புதிய தாக்குதல்களை தாய்லாந்து இராணுவம் ஆரம்பித்திருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் மோதல்களை நிறுத்துவதற்கு முயற்சித்த போதும் அவை தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீளமான சுரங்கப்பாதையை சீனா திறந்து வைத்துள்ளது





உலகில் மிகவும் நீளமான சுரங்கப்பாதையை சீனா திறந்து வைத்துள்ளது.

சீனாவின் சியாக்ஜியாங் மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த சுரங்கப்பாதை 22.13 கிலோ மீற்றர் நீளம் கொண்டதென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உரும்கி நகரத்திலிருந்து யூலி நகரம் வரை செல்லும் அதிவேக வீதியின் ஒரு பகுதியாக இந்த சுரங்கப்பாதை அமைந்துள்ளது.

# தாய்வானில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## ஒரே வாரத்தில் இரண்டாம் முறை

தாய்வானின் வடகிழக்கு கடலோர நகரமான யிலானுக்கு அருகே நேற்று இரவு, 7.0 மெக்னிடியூட் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

கடலுக்கு அடியில் சுமார் 73 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கத்தால், தலைநகர் தாய்பேயில் உள்ள உயரமான கட்டடங்கள் பலமாக குலுங்கியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், மக்கள் அச்சமடைந்து வீதிகளில் தஞ்சமடைந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து அந்நாட்டின் தேசிய தீயணைப்பு சேவை மற்றும் பொலிஸார் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, கடந்த புதன்கிழமை 6.0 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஒரே வாரத்தில் தாய்வானைத் தாக்கும் இரண்டாவது பெரிய நிலநடுக்கம் இதுவாகும்.



இரண்டு புவித்தகடுகளின் சந்திப்பில் அமைந்துள்ள தாய்வானில், கடந்த 1999 ஆம் ஆண்டு ஏற்பட்ட 7.3 மெக்னிடியூட் அளவிலான நிலநடுக்கத்தில் 2,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள்- 28.12.2025




இன்றைய நாள் உங்களுக்கு அனுகூலமாக இருக்காது. நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று வெற்றி பெறுவதற்கு அமைதியான கட்டுப்பட்டான அணுகுமுறை தேவை.

திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் பணியில் தவறுகளை தவிர்க்கலாம். என்றாலும் உங்கள் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் பாதிக்கும். எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்வதன் மூலம் உறவுப் பிணைப்பை வலுப்படுத்த முடியும்.

பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். இன்று மோசமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப்படும். எந்த விஷயத்தையும் யதார்த்தமாக கையாள வேண்டும். சவாலான சூழ்நிலைகளை எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி தைரியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவு காணப்படாது. அதிகப்படியான பணிகள் கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் உறவில் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க சிறப்பாக திட்டமிட வேண்டும்.

வயிற்று வலியினால் சில பிரச்சினைகள் ஏற்படும். நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க தண்ணீர் அதிகமாகப் பருகுங்கள்.




இன்று உங்களுக்கு எதிர்பாராத நன்மைகள் நடக்கும். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளைக் கையாளும்போது இன்று பொறுமை மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் தலைவலியால் பாதிக்கப்படுவீர்கள். அமைதியான போக்கு நல்ல பலன் தரும்.




பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

பணியில் திருப்தியின்மை காணப்படும். திட்டமிட்ட முயற்சியின் மூலம் உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை ஜெயிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் வேண்டும். மனம் திறந்து பேச வேண்டும்.

உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று சேமிப்பதற்கும் வாய்ப்பு இருக்காது.




இன்று நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். திட்டமிட்ட முயற்சியும் நேர்மறை எண்ணங்களும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

வேலைகள் அதிகமாக காணப்பட்டாலும் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறனில் உங்கள் தன்னம்பிக்கை வெளிப்படும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு இருவரும் மகிழ்ச்சியடைவீர்கள்.

இன்று உங்களிடம் கணிசமான பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள். இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. நேர்மையாக பணியாற்றுவது சவாலானதாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும். உறவுப் பிணைப்பை வலுப்படுத்த அன்பாக இருங்கள்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத்தின்போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.




இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். திட்டமிட்ட முயற்சியும் செயல்களில் விழிப்புணர்வும் தேவை. இன்று உங்களுக்கு அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக உங்களிடம் கவனக்குறைவு காணப்படும். திட்டமிட்டு கவனமுடன் இருந்தால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு இருப்பதாக உணர்வீர்கள். இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் இந்த நிலையை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. செலவுகள் அதிகமாக காணப்படுவதன் காரணமாக இன்று பணம் கையாள்வது கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் கடின உழைப்பின் மூலம் வெற்றி காணலாம். ஆன்மீக ஈடுபாடு மற்றும் ஏழைகளுக்கு செய்யும் உதவி மூலம் ஆறுதல் பெறலாம்.

பணிகள் அதிகமாகவும் சவாலானதாகவும் இருக்கும். வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் ஏற்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உறவில் நல்லிணக்கம் பாதிக்கும். நீங்கள் சிறிது ஏமாற்றகரமாக உணர்வீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள்- 28.12.2025




இன்று உங்கள் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கலாம். விரைவான செயல்கள் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்களின் சிறந்த முயற்சி மூலம் உங்கள் செயல்திறனை மேம்படுத்த இயலும். உங்களின் தனித்த திறனும் திறமைகளும் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் நிலை காணப்படும். நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் முன்பு எடுத்த விவேகமான முடிவு காரணமாக இன்று உங்களின் நாள் வெற்றிகரமாக அமையும். உங்களிடம் இன்று உறுதியும் உற்சாகமும் காணப்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான நிலை காணப்படும்.சக பணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் நேர்மறையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பணத்தை சேமிப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமான பலன்கள் தருவதைக் காண்பீர்கள். சம நிலையோடு இருந்தால் சரியான முடிவெடுத்து வெற்றி காணலாம். இன்று உங்களிடம் அமைதியும் திருப்தியும் காணப்படும்.

உங்களின் தனித்த திறன் மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கானபாராட்டைஉங்கள்மேலதிகாரிகளிடமிருந்து பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நண்பர்களின் இல்லத்திற்கு உங்கள் துணையை அழைத்துச் செல்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.

முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி பெறலாம். உங்களிடம் காணப்படும் உற்சாகமான போக்கு காரணமாக நீங்கள் உங்கள் செயல்களை எளிதாக ஆற்றுவீர்கள்.

பணியில் உங்களுக்கு ஏற்படும் திருப்தியான உணர்வு காரணமாக நீங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை அடைவதற்கு அதிக பணம் காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்றுநீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.





# மோட்டார் சைக்கிள் விபத்தில் 18 வயது மாணவன் உயிரிழப்பு

**(உடப்பு க.மகாதேவன்)**

லுனுவில பகுதியில் நேற்று முன்தினம் அதிகவேகத்தில் செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தொலைபேசிக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திய 18 வயதுடைய பாட சாலை மாணவன் ஒருவர் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை லுனுவில பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.



